உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 20.06.2026 • மலர் 04 • இதழ்: 171 • சனிக்கிழமை • Edition : Nagercoil • 20.06.2026 • Vol : 04 • Issue : 171 • Page : 4 • Rs. 5/-

### இந்தியா, அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்து

# விரைந்து செயல்பட அதிகாரிகளுக்கு உத்தரவு

## ட்ரம்ப் , மோடி அறிவிப்பு

புதுடெல்லி, ஜூன் 20

இந்தியா, அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாக விரைந்து செயல்பட வேண்டும் என்று அதிபர் டொனால்டு ட்ரம்ப், பிரதமர் நரேந்திர மோடி அவரவர் நாடுகளின் உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு உள்ளனர்.

கடந்த ஆண்டு ஜனவரியில் அமெரிக்க அதிபராக டொனால்டு ட்ரம்ப் பதவியேற்றார். அடுத்த சில மாதங்களில் சுமார் 100க் கும் மேற்பட்ட நாடு களுக்கான புதிய வரி விகிதங்களை அவர் அறிவித்தார். இதன்படி இந்திய பொருட்களுக்கு 50 சதவீத வரி விதிக்கப்பட்டது. இந்த சூழலில் வரிவிதிப்பு தொடர்பான வழக்கை கடந்த பிப்ரவரி இறுதியில் விசாரித்த அமெரிக்க உச்ச நீதிமன்றம், அதிபர் ட்ரம்பின் வரி விதிப்பை ரத்து செய்தது.

இதனிடையே வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக இந்தியா, அமெரிக்கா இடையே தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது. கடந்த ஏப்ரல் 20 முதல் 23ம் தேதி வரை அமெரிக்காவில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக அமெரிக்காவின் சிறப்பு வர்த்தக குழுவினர் கடந்த 2 ம் தேதி முதல் 4ம் தேதி வரை டெல்லியில் முகாமிட்டு இந்திய குழுவினருடன் விரிவான பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்த சூழலில் பிரான்ஸின் எவியான் நகரில் நடைபெற்ற ஜி7 மாநாட்டின் ஒரு பகுதியாக அமெரிக்க அதிபர் ட்ரம்பும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினர். அப்போது வர்த்தக ஒப்பந்தம் குறித்து இருவரும் விரிவாக ஆலோசனை நடத்தினர். அதிபர் ட்ரம்ப் கூறும்போது, "இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் இறுதிக் கட்டத்தை நெருங்கி உள்ளது'' என்று தெரிவித்தார்.



இது தொடர்பாக மத்திய வெளியுறவு அமைச்சகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்தியா, அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாக விரைந்து செயல்படுமாறு அவரவர் நாடுகளின் உயர் அதிகாரிகளுக்கு அதிபர் ட்ரம்பும், பிரதமர் மோடியும் உத்தரவிட்டு உள்ளனர்.

அமெரிக்க அரசின் சிறப்பு பிரதிநிதி ஜேமீசன் கிரீர் அடுத்த வாரம் இந்தியாவுக்கு வருகிறார். அப்போது இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக முக்கிய பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



தூத்துக்குடிமாவட்டஆட்சியர்அலுவலகக்கூட்டரங்கில் இன்றுபொதுசுகாதாரம்மற்றும்நோய்தடுப்புமருந்துத்துறை சார்பில் சுகாதார நலச்சங்கம் ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், தலைமையில் நடைபெற்றது.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் (19.06.2026) நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த இயக்குநர் இமயம் பாரதிராஜா உடல்நலக்குறைவால் காலமானதையொட்டி, அன்னாரது நினைவைப் போற்றும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் விவசாயப் பெருமக்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.

### கோதேஸ்வரம் பத்திரகாளி அம்மன் கோயிலில்

## 1008 திரு விளக்கு பூஜை

களியக்காவிளை, ஜூன்.20

மார்த்தாண்டம் சந்திப்பு அருகே கோதேஸ்வரம் பத்திரகாளி அம்மன் கோயில் உள்ளது. இந்த கோயிலில் இவ்வருட வருஷாபிஷேக திருவிழா கடந்த வாரம் ஜூன் 14ம் தேதி துவங்கியது. தினமும் அஷ்டதிரவ்ய மஹா கணபதிஹோமம்,வேதபாராயணம்,சிறப்புதீபாராதனை, சுவாமி ஆலய வீதி வலம் வருதல், அன்னதானம், மாலை, பஜனை, ஸஹஸ்ரநாம அர்ச்சனை, மலர் நிவேத்திய பூஜை, திருவிக்கு பூஜை, மஹா தீபாராதனை, கலை நிகழ்ச்சிகள் நடக்கிறது. ஏழாம் திருவிழா ( ஜுன் 20ம் தேதி) இன்று மாலை 1008 திருவிளக்கு பூஜை நடக்கிறது. திருவிளக்கு பூஜையினை நெட்டாங்கோடு ஶ்ரீ சாரதேஸ்வரி ஆஸ்ரமம் மாதாஜி யோகேஸ்வரி மீராபுரி நடத்துகிறார். பிந்து ஶ்ரீ பிரகாஷ் திருவிளக்கு ஏற்றி வைக்கிறார். திருவிளக்கு பூஜையில் கலந்து கொள்ளும் மகளிர்க்கு குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும். தொடர்ந்து மகளிர் மாநாடு, பரிசு வழங்கல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடக்கிறது.

ஏற்பாடுகளை கோதேஸ்வரம் பத்திரகாளி அம்மன் பக்தர்கள் செய்து வருகின்றனர்.

தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701



### முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்தநாள்

## பள்ளி மாணவர்களுக்கு தவெக சார்பில் இலவச நோட்டு புத்தகங்கள்

நாகர்கோவில், ஜுன். 20

தமிழக வெற்றி கழகத்தின் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான ஜோசப் விஜயின் பிறந்த நாள் 22ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் மாதவன் அறிவுறுத்தலின் படி நாகர்கோவில் மாநகராட்சி 15வது வார்டு சார்பில் காமராஜபுரம் சி.எஸ்.ஐ தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இலவச நோட்டு புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு நாகர்கோவில் மாநகர செயலாளர்சிவன்விஜய்தலைமை தாங்கினார்.

பள்ளி தலைமை ஆசிரியர் முன்னிலை வகித்தார்.

15வது வட்டச் செயலாளர் ஜெரின் மாணவ, மாணவிகளுக்கு இலவச நோட்டு புத்தகங்களை வழங்கி வாழ்த்து கூறினார். இந்த நிகழ்வில் நாகர்கோவில் மாநகர துணை செயலாளர் இளங்கோ மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### இலந்தையடிவிளை அரசு பள்ளியில்

## ஐந்து முதல் 10ம் வகுப்பு மாணவர்களுக்கு நோட்டு புத்தகம்



நாகர்கோவில், ஜுன். 20

இலந்தையடிவிளை அரசு பள்ளியில் ஐந்து முதல் 10ம் வகுப்பு மாணவர்களுக்கு நோட்டு புத்தகம். இலந்தையடிவிளை அரசு உயர்நிலைப்பள்ளியில், ஐந்தாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையிலும் உள்ள 193 மாணவ மாணவியர்களுக்கு 579 நோட் புத்தகங்கள் முகிலன் குடியிருப்பில் உள்ள ஆத்மபோதோதய சங்கம், ஶ்ரீ சுபானந்த ஜோதி ஆசிரமம் திருக்கோயில் சார்பில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு திமுக தலைமை செயற்குழு உறுப்பினரும் ஊர் தலைவருமான பார்த்தசாரதி தலைமைவகித்துமாணவ மாணவியருக்கு புத்தகங்கள் வழங்கினார். பள்ளிதலைமையாசிரியர் செம்பியன், இவிஎஸ் அமைப்பாளர் சந்துரு, ஆசிரமம் செயலாளர் சுரேஷ் கார்த்திக், ஊர் பொருளாளர் கிருஷ்ண கோபால் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### நாராயணா மருத்துவமனையின்

## டயாலிசிஸ் "மற்றும் " டே கேர் கீமோ போர்ட் தெரபி" மையம் திறப்பு விழா



சென்னை, ஜூன் 20

சென்னை புரசைவாக்கம் தானா தெருவில் கடந்த 30 ஆண்டு காலமாக பொதுமக்களுக்கு மருத்துவ சேவையை செய்து வரும் நாராயணா மருத்துவமனையின் " டயாலிசிஸ் "மற்றும் " டே கேர் கீமோ போர்ட் தெரபி" மையத்தின் புதிய கட்டிட திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை மற்றும் செய்தி துறை அமைச்சர் ராஜ்மோகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் நாராயண மருத்துவமனையின் நிறுவனர் மருத்துவர் சீனிவாசன், மருத்துவர் வரலட்சுமி சீனிவாசன், மருத்துவர்அமரேஷ் நாராயண், மோனிகா அமரேஷ், அபிஷேக் நாராயண் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## ஈரோட்டில் ராகுல் காந்தி பிறந்தநாள் விழா காங்கிரசார் கேக் வெட்டி கொண்டாட்டம்



ஈரோடு ஜூன் 20

ராகுல்காந்திபிறந்தநாள் விழா ஈரோட்டில் கொண்டாடப்பட்டது.இதையொட்டி ஈரோடு பெரிய மாரியம்மன் கோயிலில் மண்டலத் தலைவர் விஜயபாஸ்கர் தலைமையில் விஷேச பூஜை நடத்தப்பட்டு இனிப்பு வழங்கப்பட்டது இதன் பிறகு காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் ராஜேஷ் ராஜப்பா தலைமையில் சர்வமத பிரார்த்தனை நடைபெற்றது. இதில் சிவனடியார் ஓதுவார் ஜனார்த்தனன், பாஸ்டர் டேவிட் பள்ளிவாசல் இமாம் அனஸ் ஆகியோர் கலந்துகொண்டு கூட்டுப் பிரார்த்தனை நடத்தினர். பின்னர் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. மேலும் மாணவர்களுக்கு பென்சில், பேனா, நோட்டு புத்தகங்கள் மற்றும் நலிவடைந்த மகளிருக்கு சேலைகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.எம். பழனிசாமி, முன்னாள் மாவட்டத் தலைவர்கள் திருச்செல்வம் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் மாரியபபன். முன்னாள் கவுன்சிலர் சூரம்பட்டி சாம்ராட் அசோக் ஊடகப் பிரிவு தலைவர் முகமது அர்சத் சிறுபான்மை துறை துணைத் தலைவர் பாஷா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# யோகா உடலை மட்டுமல்லாமல் மனதையும் வளப்படுத்தும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி பேச்சு



ஈரோடு ஜூன் 20

ஈரோடு கலெக்டர் அலுவலக வளாக ாளத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் இந்திய மருத்துவம் ஓமியோபதி துறை, நந்தா இயற்கை யோகா மருத்துவக்கல்லூரி இணைந்து நடத்திய சர்வதேச யோகா தின விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும் போது தெரிவித்ததாவது.

இன்றைய சமூக மற்றும் பொருளாதார சூழ்நிலைகளில் வாழ்க்கை முறை மாற்றங்கள் மற்றும் தவறான உணவுப் பழக்க வழக்கங்களால் பலரும் நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனைத் தவிர்க்கவும், உடல் மற்றும் மனநலத்தைப் பேணிக்காக்கவும் யோகா ஒரு சிறந்த வழிமுறையாக விளங்குகிறது. மேலும், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் தோன்றிய யோகா கலை. இன்று உலக நாடுகள் முழுவதும் பரவி ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வழங்கி வருகிறது. யோகா என்பது உடலை மட்டுமல்லாமல் மனதையும் வளப்படுத்தும் முழுமையான பயிற்சியாகும். இதன் முக்கியத்துவத்தை பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே கொண்டு சேர்க்கும் நோக்கில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இன்றைய வேகமான வாழ்க்கைச் சூழலில் அனைத்து வயதினரும் தினசரி யோகா பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் உடல் மற்றும் மனநலத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும். யோகாவை அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக கடைப்பிடிப்பதன் மூலம் உடல் ஆரோக்கியம், மன அமைதி, கவனக்குவிப்பு மற்றும் செயல்திறன் மேம்படும். ஆசிரியர்கள். மாணவர்கள். அரசு அலுவலர்கள். பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் யோகா பயிற்சியைள தொடர்ந்து மேற்கொண்டு ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்ற வேண்டும் இவ்வாறு அவர் கூறினார். தொடர்ந்து உடல் மற்றும் மனநலத்தை மேம்படுத்துவதில் யோகாவின் முக்கியத்துவம், ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்றுவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் நந்தா இயற்கை மற்றும் யோகா மருத்துவக் கல்லூரியின் போராசிரியர்கள், மாணவர்களுடன் இணைந்து பல்வேறு யோகாசனங்கள், மூச்சுப்பயிற்சிகள், ஆசனங்கள் மற்றும் தியானப் பயிற்சிகள் செய்முறை விளக்கத்துடன் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர். (நலப்பணிகள்) ஜெயந்தி. மாவட்ட சுகாதார அலுவலர் அருணா, மாவட்ட குழந்தை வளர்ச்சி அலுவலர் பூங்கோதை. மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் யசோதை,நந்தா கல்வி நிறுவனங்களின் தலைவர் சண்முகன், கவுந்தபாடி, அரசு மருத்துவமனை உதவி மருத்துவ அலுவலர் (சித்தா), வெங்கடாசலம், முதல்வர் நந்தா இயற்கை மற்றும் யோகா மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் ரீவ்ஸ் ஜஸ்டிலிணட் தாஸ், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

குமரி மாவட்டத்தில்

# விதிகளை மீறி வாகனங்களில் பொருத்திய 1000 க்கும் மேற்பட்ட எல்இடி விளக்குகள் பறிமுதல்

நாகர்கோவில், ஜூன். 20

குமரி மாவட்டத்தில் சாலை விபத்துகளை முற்றிலுமாக தவிர்த்து விபத்து இல்லாத குமரி என்ற இலக்கை எட்டும் நோக்கில் போலீசார் பல்வேறு அதிரடிநடவடிக்கைகளைமேற்கொண்டுவருகின்றனர். மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின் உத்தரவின் பேரில் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தீவிர வாகன சோதனை நடத்தப்பட்டு வருகிறது. இதில் விபத்துக்கு காரணமான அதிக வெளிச்சம் கொண்ட எல்இடி விளக்குகள் பொருத்தப்பட்டு, வாகன ஓட்டிகளின் கண்களை பறிக்கும் வகையிலான அதிக வெளிச்சம் கொண்ட மின்விளக்கு மற்றும் ஒலி மாசு ஏற்படுத்தும் தடை செய்யப்பட்ட ஏர் ஹாரன்களை போலீசார் பறிமுதல் செய்து வருகின்றனர்.

கடந்த இரண்டு நாட்களில் மட்டும் விதிகளை மீறியதாக 496 வழக்குகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், நேற்று 3 வது நாளாக இரவிலும் போலீசார அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். நாகர்கோவில் போக்குவரத்து ஆய்வாளர் அருண் தலைமையிலான போலீசார் வடசேரி, பார்வதிபுரம் மற்றும் வெட்டூர்ணிமடம் பகுதிகளில் வாகனங்களை நிறுத்தி சோதனை செய்தனர்.

அப்போதுவிதிகளுக்குபுறம்பாகபயன்படுத்தப்பட்ட 55 ஏர் ஹாரன்களும் 135 எல்இடி விளக்குகளும் பறிமுதல்செய்யப்பட்டன.மேலும்விதிமீறல்ஈடுபட்ட 61 வாகனங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

இதே போல் கன்னியாகுமரி, மார்த்தாண்டம், தக்கலை, குளச்சல் ஆகிய கோட்டங்களுக்கு உட்பட்ட பகுதிகளிலும் தீவிர சோதனை நடத்தப்பட்டது. ஒரே நாளில் மாவட்டம் முழுவதும் 500 மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 340 எல்இடி விளக்குகளும், 70 ஏர் ஹாரன்களும் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த வகையில் கடந்த 3 நாட்களில் மட்டும் மாவட்டம் முழுவதும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட எல்இடி விளக்குகள் மற்றும் ஏர்ஹாரன்கள்ப போலீசார் பறிமுதல் செய்து வாகன ஓட்டிகளுக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

முதன்முறையாக ஏர் ஹாரன் பயன்படுத்திய வாகனங்களுக்கு ரூபாய் 500 அபராதம் விதிக்கப்பட்ட நிலையில், 2 வது முறையும் அதே வாகனத்தில் ஏர் ஹாரன் பயன்படுத்தியது கண்டறியப்பட்டால் ரூ.10,000 வரை அபராதம் விதிக்கப்படும் என போக்குவரத்து போலீசார் எச்சரித்துள்ளனர்.



# வலம்புரிவிளை மாநகராட்சி குப்பை கிடங்கை பார்வையிட்ட மாநகராட்சி கமிஷனர்

நாகர்கோவில், ஜூன். 20

நாகர்கோவில் மாநகராட்சியின் புதிய கமிஷனராக ஐஸ்வர்யா நேற்று முந்தினம் பொறுப்பேற்றுக் கொண்டார். அதை தொடர்ந்து அவர் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிவுகளுக்கும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் நாகர்கோவில் மாநகரம் முழுவதும் சென்று அதிரடி ஆய்வு மேற்கொண்டார்.

வடசேரி பஸ் நிலையத்தில் அங்குள்ள கழிவறை வசதிகள் மற்றும் தூய்மை பணிகளை பார்வையிட்டார். பின்னர் வேப்பமூடு பூங்காவிற்கு சென்று ஆய்வு செய்து அங்கு பொதுமக்களின் பயன்பாட்டுக்காக வைக்கப்பட்டிருந்த குடிநீரை தானே குடித்து பார்த்து அதன் தரத்தை சோதித்தார். பொதுமக்களுக்கு எந்த நேரம் தரமான குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்றும் பூங்காவை தினமும் தூய்மையாக பராமரிக்க வேண்டும் என அங்கு இருந்த ஊழியர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த நிலையில் கமிஷனர் நேற்று 2 வது நாளாக கள ஆய்வு மேற்கொண்டார். நாகர்கோவில் வலம்புரி விளையில் உள்ள மாநகராட்சி குப்பை கிடங்கு சென்று அங்கு மலை போன்று குவித்து வைக்கப்பட்டுள்ள குப்பையை பார்வையிட்டார். பயோ மைனிங் முறையில் அந்த பகுதியை உடனடியாக சீரமைக்க தேவையான அனைத்து விதிகளையும், நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். பின் அங்கு உள்ள உரமாக்கல் மையத்தையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்பு சரலூர் சானல் கரை பகுதியில் தூய்மை பணியாளர்கள் வீடுகளில் மட்கும் குப்பை, மட்க்காத குப்பை என பிரித்து வாங்குவதை கண்காணித்தார். அப்போது மக்களிடம் தூய்மை பணியாளர்கள் முறையாக குப்பைகளை பிரித்து வாங்குகிறார்களா? என்பது குறித்த விவரங்களை கேட்டறிந்தார். செம்ம குளத்தில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளை பார்வையிட்ட கமிஷனர் ஐஸ்வர்யா அந்த பணிகளை பருவமழைக்கு முன்பாக விரைந்து முடிக்குமாறு அறிவித்தார். இந்த ஆய்வுகளின் போது மாநகராட்சி பொறியாளர் ரகுராமன் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் பலர் உடன் இருந்தனர்.

சென்னை பச்சையப்பன் கல்லூரிக்கு

# இரு பாலர் அந்தஸ்து வழங்கிய தமிழ்நாடு அரசு

சென்னை, ஜூன்20,

இந்தியாவின்புகழ்பெற்றஉயர்கல்விநிறுவனங்களில் ஒன்றானபச்சையப்பன்கல்லூரி,அதன்184ஆண்டுகால சிறப்புமிக்க பயணத்தில் இருபாலர் கல்லூரி அந்தஸ்து என்ற புதிய வரலாற்றுச் சாதனையை எட்டியுள்ளது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு, மாணவிகளுக்கும் இந்நிறுவனத்தின் வாயில்களைத் திறந்து வைத்து, தரமான உயர்கல்விக்கான அதிக வாய்ப்புகளை உருவாக்குவதோடு, பன்முகத் தன்மையும் உயிர்ப்பும் நிறைந்த கல்விச் சூழலை உருவாக்கும். கல்லூரியின் பாரம்பரியத்தையும் பெருமைமிகு மரபையும் பாதுகாத்தபடியே, நவீன கல்வி மதிப்புகளுக்கு இம்முயற்சி உறுதுணையாக அமைகிறது.

1842 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பச்சையப்பன் கல்லூரி, பல தலைமுறைகளாக கல்விச் சிறப்பு, சமூகப் பொறுப்பு மற்றும் கல்விச் சேவையின் அடையாளமாக விளங்கி வருகிறது. இருபாலர் அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பது, கல்லூரியின் வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்துள்ளதுடன், அனைவரையும் உள்ளடக்கிய கல்வி, சமத்துவம் மற்றும் சமுதாயத்தின் வளர்ந்து வரும் கல்வி எதிர்பார்ப்புகளுக்கான அதன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.




# சேலம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சேலம், ஜூன் 20

தமிழக அரசால் விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேளாண் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளித்து தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிற அனைத்துத் திட்டங்களையும்வேளாண்பெருமக்களுக்கு முழுமையாக கொண்டு சே ர்ப்பதுடன் விவசாயிகளின் குறைகளை அனைத்து துறை அலுவலர்கள் அறிந்து நிவர்த்தி செய்யும் வகையில் மாதந்தோறும் மாவட்ட ஆட்சியர் அலுவலக த்தில் விவசாயிகளின் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் வேளாண்மை சாகுபடியை பொருத்தவரை நெல், சோளம், மக்காச்சோளம், ராகி, நிலக்கடலை உள்ளிட்ட உணவு தானியங்கள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் 27,513 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் தேவையான அளவு உரங்கள், பூச்சி மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. குறுகிய கால கடன் மற்றும் மத்திய கால முதலீட்டு வேளாண்மை கடன்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்படுகிறது.

இது குறித்தும் கால்நடை பராமரிப்பு துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், மல்பரி சாகுபடி மற்றும் பட்டுக்கூடு அறுவடை குறித்தும் மாதாந்திர முன்னேற்றங்கள் குறித்தும் தொடர்புடைய அலுவலர்களுடன் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை விரைவாக அடைய தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விவசாயிகளின் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தை ஒட்டி இன்று மாவட்ட ஆட்சியரக தரைதளத்தில் நெல், சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகள், மரபுசார் விதைகள் இவை வேளாண் உற்பத்தியாளர்கள் நிறுவனம் சார்பில் உற்பத்தி பொருட்கள் குறித்து விவசாயிகள் பயன்பெறும் வகையில் காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் தெரிவித்தார்.

# கிருஷ்ணகிரியில் காங்கிரஸ் கட்சி சார்பில்

## ராகுல் காந்தி பிறந்த நாளினை முன்னிட்டு திருக்கோவில்களில் சிறப்பு பூஜைகள் செய்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது.



கிருஷ்ணகிரி ஜூன் 20:

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் இன்று பிறந்த நாள் கானும் பாராளுமன்றத்தின் எதிர்கட்சி தலைவர் ராகுல்காந்தி பிறந்த தினத்தினை முன்னிட்டு காங்கிரஸ் கட்சியின் சார்பில், கிருஷ்ணகிரி டான்சி தொழிற்பேட்டையில் அமைந்துள்ள ஶ்ரீசெல்வ வினாயகார் திருக்கோவிலில் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம்.சி.ரகு தலைமையில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

இந்த சிறப்பு பூஜையில் ராகுல் காந்தி நீண்ட காலம் நலமுடன் வாழ வேண்டி சிறப்பு அபிஷேக பூஜைகளுடன் அலங்காரத் தீபாதரணைகளும் நடைப்பெற்றது.

இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி புதியபேருந்து நிலையம் அருகில் நடைப்பெற்ற ராகுல் காந்தி பிறந்தநாள் விழவிற்கு சிறப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்ட கிருஷ்ணகிரி காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத் வருகைதர, அவருக்கு கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம்.சி.ரகு தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

பின்னர் கோபிநாத், ராகுல்காந்தி பிறந்தநாளினை சிறப்பிக்கும் வகையில் கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கினார்.

அப்போது மாவட்ட

தலைவர் எம்.சி.ரகு தலைமை வகித்தார். நகரத் தலைவர் லலித் ஆண்டனி வரவேற்புரை ஆற்றினார். மாவட்டத் துணைத் தலைவர் தளபதி ரகமத்துல்லா,

வட்டாரத் தலைவர்கள் விஜயகுமார், கல்லாவி ரவி, நஞ்சுண்டன், சித்திக், கோபாலகிருஷ்ணன், ஶ்ரீராம், சுப்பிரமணி, மாரியப்பன், மாவட்ட பொதுச்செயலாளர்கள் டாக்டர் தகி, ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர்,

இந்த நிகழ்ச்சிக்கு மாநில பொதுச்செயலாளர் ஏகாம்பாவாணன், மாநில செயற்குழு உறுப்பினர் ஆகா.கிருஷ்ணமூர்த்தி, மாநில பொதுக்குழு உறுப்பினர் ராஜேந்திரவர்மா, முன்னாள் மாவட்ட தலைவர் ராஜகுமாரவேல், மாவட்டத் துணைத் தலைவர்

பி.சி.சேகர், எஸ்.சி, எஸ்.டி, பிரிவு மாநில அமைப்பாளர் ஆறுமுக சுப்பிரமணி ஆகியோர்கள் கலந்து கொண்டு ராகுல்காந்தியை வாழ்த்தி பேசினார்கள், மேலும் இந்த நிகழ்ச்சிகள் கிருஷ்ணகிரி நகர மன்ற உறுப்பினர் விநாயகம், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் அர்னால்டு ரமேஷ், கலை பிரிவு மாவட்ட தலைவர் கோவிந்தசாமி, வழக்கறிஞர் பிரிவு மாநில செயலாளர் ஷபிக் அஹமத், மாவட்ட மகளிர் அணி தலைவி உமா சங்கரி, எம் சி சம்பத்,

ஐஎன்டி சி அண்ணாதுரை, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சம்பத், மீனவர் அணி செல்வம், சதாம் ,மடத்தனூர் ஆறுமுகம்,

நகர மன்ற உறுப்பினர் முபாரக், சிறுபான்மை பிரிவு மாவட்ட தலைவர் முனீர் அகமத் , ஓ பி சி முன்னாள் மாவட்ட தலைவர் அஜித் பாஷா, வெங்கடேசன்,

பிரஸ் சரவணன், ஏழுமலை, மத்தூர் பாபு, பாண்டுரங்கன், முன்னாள் வட்டார தலைவர் பன்னீர்செல்வம், கஞ்சனூர் வெங்கடேசன்,சங்கர், இளைஞர் காங்கிரஸ் சக்திவேல், அனுமந்தன், போச்சம்பள்ளியை சேர்ந்த சிவலிங்கம், மனோசரன், கணேஷ்,

சக்திவேல், கருணாமூர்த்தி, கமால் கான், மொயின் முனவர், கமால்ஹான், மரிக்கம்பட்டி சக்திவேல், முஸ்தாக், சத்தி உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் மாவட்ட செயலாளர் சக்கரவர்த்தி நன்றி உரையாற்றனர்.

# பருகூரில் வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) நிறைவு விழா

## மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக் குறல் நல திட்ட உதவிகளை வழங்கினார்




பர்கூர் ஜூன்20:

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் ச. தினேஷ்குமார்உத்தரவின் பெயரில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைகுறல் தலைமையில் வட்டாட்சியர் சி.சக்தி முன்னிலையில் 1435ஆம்ஆண்டுபசலிஆண்டுக்கானவருவாய்தீர்வாயம் (ஜமாபந்தி) நிறைவு விழாவில் சூலாமலை குருவிநாயனப்பள்ளி ஒரப்பம் செந்தார ப்பள்ளி மோடிக்குப்பம் வருவாய் கிராமங்களுக்கு உட்பட்ட பொதுமக்களிடமிருந்து முதியோர்உதவித்தொகை, ஜாதி சான்றிதழ், பட்டா மாற்றம், உட்பிரிவு பட்டா, மற்றும் வீட்டு மனைபட்டா, பட்டாரத்து, ஆக்கிரமிப்பு அகற்றல், நில அபகரிப்பு, புதிய குடும்ப அட்டை, கிராம கணக்கில் மாற்றம், 523 மனுக்கள் பெறப்பட்டது இலவச வீட்டுமனை பட்டா உள்ளிட்ட 73 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு உடனடி ஆணை களை மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனை குறல் வழங்கினார் இதர துறைகள் சார்ந்த மனுக்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தகுதியான மனுக்களுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார் இந்த நிகழ்ச்சியில் தனி வட்டாட்சியர் மோகன்தாஸ் வருவாய் ஆய்வா ளர்கள் உள்ளிட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் ஏராள மான பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களுடைய குறைகளை மனுக்களாக வழங்கினர்

# மாற்றுக் கட்சியினர் மைய மாவட்ட செயலாளர் தலைமையில் தவெக வில் இணையும் விழா




கிருஷ்ணகிரி ஜூன் 20

பல்வேறு கட்சியிலிருந்து விலகி, கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட செயலாளர் சுரேஷ் தலைமையில் கே.பி.என். ஹரிஷ், கே.பி.எல் கபில், முரளிதரன், பிரசாந்த், சந்திரன், ரமேஷ், ராஜேஷ், முனீர், ஆகியோர் தங்களை தமிழக வெற்றி கழகத்தில் இன்று தங்களை அடிப்படை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர். கிருஷ்ணகிரி டான்சியில் உள்ள தவெக மாவட்ட அலுவலகத்தில், கிருஷ்ணகிரி மைய மாவட்ட கழகச் செயலாளர் சுரேஷ் அனைவரையும் இன்முகத்தோடு வரவேற்று, சால்வை மற்றும் கழகத் துண்டினை அணிவித்தார். பின்னர் புதிதாக இணைந்துள்ளவர்களின் கட்சிக் கொடியினை பொருத்தி, அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியின் போது செயற்குழு உறுப்பினர்கள் ரத்தினவேல் ஹேமப்பிரியா கழக நிர்வாகிகளான தென்னரசு, வேலன், ஏஜாஷ், சரவணன், ஆகியோர் உடன் இருந்தனர்.

தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு

# பண்பொழி திருமலைக் குமாரசுவாமி திருக்கோவிலில் தங்கத்தேர் இழுத்து சிறப்பு பூஜை செய்த தவெக மத்திய மாவட்ட செயலாளர் ராஜ பிரகாஷ்



தென்காசி, ஜூன்.20

வரும் 22ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சரும் தவெக தலைவருமான ஜோசப் விஜய் பிறந்தநாள் கொண்டாடப்பட இருப்பதால் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியில் உள்ள கோவில்களில் தவெக நிர்வாகிகள், தொண்டர்கள் அவர் நலமுடன் வாழ சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். இதே போல் தென்காசியிலும் முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு

தென்காசி மாவட்டம் பண்பொழி பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு திருமலைக் குமாரசுவாமி திருக்கோவிலில்

தென்காசி மத்திய மாவட்ட செயலாளர் ஜே ஏ .எஸ்,ராஜபிரகாஷ் தங்கத் தேர் இழுத்து சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டார். அப்பொழுது தமிழ்நாடு முதலமைச்சர் விஜயின் படத்தை வைத்துக் கொண்டு கோவிலை சுற்றி வந்து சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது. மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் நீண்ட ஆயுள் பெற வேண்டும் என்றும் வரும் காலங்களில் மீண்டும் அவர் முதலமைச்சராக இருந்து பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்க வேண்டும் என வேண்டி தங்க தேர் இழுத்து சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டதாக அவர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் தவெக முக்கிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை உள்ளகரம், கிருஷ்ணா நகர் திலகர் தெருவில் அமைந்துள்ள

# அருள்மிகு ஸ்ரீ விஜய கணபதி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா

சென்னை, ஜூன் 20

சென்னை உள்ளகரம், கிருஷ்ணா நகர் திலகர் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ விஜய கணபதி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. உள்ளகரம் பகுதியில் 50 ஆண்டுகளாக ஸ்ரீ விஜய கணபதி சுவாமி பரிவார தேவதைகளான ஸ்ரீ விஜயகுமார சுவாமி, விஜயராகவ சுவாமி, விஜய மணிகண்ட சுவாமி, விஜயதுர்கா தேவி, விஜயா மாருதி சுவாமி மற்றும் நவகிரக தேவதைகளுடன் வேண்டிய வரங்கள் தந்து அருள்பாலித்து வருகின்றனர். இந்த ஆலயத்தின் திருப்பணிகள் ஆச்சாரியார்களின் அனுக்கிரகத்துடனும் இறைவனது அருள் ஆசியுடனும் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது. நிகழும் பராபவ ஆண்டு ஆனித்திங்கள் 4 ஆம் நாள் வியாழக்கிழமை சுபயோக சுப தினத்தில் சிம்ம லக்னத்தில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ காஞ்சி மகா பெரியவா சங்கராச்சாரியார் சுவாமிகள், அனுகிரகத்தாலும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் முன்னிலையில், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சத்திய சந்திரசேகர சரஸ்வதி சங்கராச்சாரியார் சுவாமிகள் அனுகிரகத்துடனும் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. மேலும் ஆலய விழா குழுவினர் சிறப்பாக கும்பாபிஷேகத்தை நடத்தினர். வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

நாகர்கோவிலில்

# கார் டிரைவரை அரிவாளால் வெட்டிய மர்ம கும்பல்: போலீஸ் வழக்கு பதிவு

நாகர்கோவில், ஜூன். 20

நாகர்கோவில் கோட்டாறு பகுதியை சேர்ந்தவர் பிரபு என்கிற சொர்ண பிரபு (34). கார் டிரைவர். நேற்று முன்தினம் இரவு ஊட்டுவாழ் மடம் பகுதியில் சென்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த 4 பேர் கொண்ட மர்ம கும்பல் திடீரென பிரபுவை வழிமறித்து தாக்குதலில் ஈடுபட்டது. அந்த கும்பல் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து பிரபுவை சரமாரியாக வெட்டியது. இதில் தலை, கால், உடல் உள்ளிட்ட பகுதிகளில் பிரபுவுக்கு பலத்த ஏற்பட்டது. உடனே அந்த கும்பல் ஓடி விட்டது. பிரபு அந்த இடத்தில் சரிந்தார். படுகாயம் அடைந்த பிரபுவை அப்பகுதியை சேர்ந்தவர்கள் மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக நாகர்கோயில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் தற்போது அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்த சம்பவம் குறித்து கோட்டாறு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு பிரபு ஊட்டுவாழ்மடம் பகுதியில் சென்றபோது, அங்கு சில சிறுவர்களும் மது அருந்திக் கொண்டிருந்ததாக தெரிகிறது.அதனைபிரபுதட்டிகேட்டதால்இருதரப்புக்கம் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது பிரபு அந்த சிறுவர்களை தாக்கியதாக கூறப்படுகிறது.

இதனால் ஏற்பட்ட ஆத்திரத்தில் சிறுவர்கள் தங்களது நண்பர்களுடன் சேர்ந்து பிரபுவை அறிவாளால் வெட்டி இருக்கலாம் என்று போலீசார் சந்தேகிக்கின்றனர். இது தொடர்பாக அந்த பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை ஆய்வு செய்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# டெங்கு பரவலை தடுக்க வீடுகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்

## பொதுமக்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தல்



நாகர்கோவில், ஜூன்.20

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தக்கலை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட வடக்கு நுள்ளிவிளை பகுதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் திடீர் ஆய்வு மேற்கொண்டு கூறியதாவது:

டெங்கு காய்ச்சல் மேல் நிலைத் தொட்டிகள், கீழ்நிலைத் தொட்டிகள், டயர்கள், உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் தேங்காய் சிரட்டை போன்றவைகளில் உற்பத்தியாகும் கொசுக்களை அழிப்பதோடு, வீட்டில் உள்ளவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். தண்ணீரை மூடி வைக்காமலும், கொசுக்கள் உற்பத்தியாகும் வகையிலும் அலட்சியமாக வைத்திருக்கும் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

டெங்கு காய்ச்சலைப் பரப்பும் ஏடிஸ் கொசுக்கள் நல்ல தண்ணீரில் தான் இனப்பெருக்கம் செய்கின்றன. எனவே, பொதுமக்கள் தங்கள் வீடுகளையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். காய்ச்சல் அறிகுறி தென்பட்டால் சுய மருத்துவம் செய்துகொள்ளாமல், உடனடியாக அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை அணுக வேண்டும். டெங்கு காய்ச்சல் பரவலை தடுக்கும் பணியில் ஈடுப்பட்டுள்ள பணியாளர்கள் சரிவர பணியை மேற்கொள்ள வில்லை என்றால் துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.நமச்சிவாயம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)சிவபாலன், வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார சுகாதார மேற்பார்வையாளர், வட்டார மருத்துவ அலுவலர், சுகாதார பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



# செடி கொடி குப்பைகளால் அடைப்பட்டு இருந்த அத்திக்கடை கால்வாயை பொதுமக்கள் தூர்வாரி சுத்தம் செய்தனர்

சுசீந்திரம், ஜூன் 20

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனந்தனாறு பாசன கால்வாய் வல்லன் குமாரன்விளை பகுதியிலிருந்து பிரிந்து அத்திக்கடை கால்வாயாக கடை வரம்பு பகுதிக்கு செல்கிறது. இக் கால்வாய் தர்மபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட நங்கூரன்பிலாவிளை சைபன் வழியாக பொட்டல் புத்தன்துறை சாலையின் அடியில் சென்று மறுபகுதிக்கு செல்கிறது. இக்கால்வாய் தண்ணீரில் மிதந்து வரும் செடிகள் மற்றும் குப்பைகளால் அடைபட்டு தண்ணீர் மறுகால் ஏற்பட்டு அவ்வப்போது வழிந்தோடி சாலையில் செல்கிறது. இதனால் சாலையில் அரிப்பு ஏற்பட்டு பழுதடைந்து வருகிறது. மேலும் தேங்கி கிடக்கும் குப்பைகளால் துர்நாற்றம் உருவாகி சுகாதார சீர்கேடுகளால் வட்டார மக்கள் பாதிக்கப்பட்டு வந்தனர்.

இதுகுறித்து பொதுமக்கள் அதிகாரிகளிடம் பலமுறை வலியுறுத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. என அப்பகுதி பொதுமக்கள் கூறுகின்றனர் இந்நிலையில் சிபிஐ எம் கட்சியின் முன்முயற்சியில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் .கண்ணன் தலைமையில் சீரமைப்பு பணி நடைபெற்றது. விவசாய தொழிலாளர்கள் சந்திரசேகரன், ரவி மற்றும் உள்ளூர் மக்களின் ஒத்துழைப்புடன் குப்பைகள் அகற்றப்பட்டு சீரமைக்கப்பட்டது.

# கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை காங்கிரஸ் கட்சி நிர்வாகி நடைபயணம்



கன்னியாகுமரி, ஜூன். 20

ராகுல்காந்தியின் 56 வது பிறந்தநாளை முன்னிட்டு ஆந்திர மாநில ராஹா உதய இந்தியா அமைப்பின் சார்பில் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையிலான நடைபயணத்தை காங்கிரஸ் கட்சி நிர்வாகி நேற்று தொடங்கினர்.

ஆந்திர மாநில காங்கிரஸ் கட்சியின் நிர்வாகியும் உயர் நீதிமன்ற வக்கீலுமான கட்டோரி வெங்கடேஷ்வரலு, இந்தியாவின் பிரதமராக ராகுல்காந்தி வரவேண்டும், அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கன்னியாகுமரி ராஜீவ்காந்தி சிலை முன்பு இருந்து தனது நடைபயணத்தை நேற்று துவக்கினார். நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த குமரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் கே.டி.உதயம் கொடியசைத்து நடைபயணத்தை துவக்கி வைத்தார். இந்த நடைபயணம் இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் வழியாக சுமார் 4 ஆயிரம் கி.மீட்டர் தூரத்தை கடந்து அடுத்த ஆண்டு (2027) ஜனவரி மாதத்தில் காஷ்மீரில் நிறைவு செய்கிறார். நிகழ்ச்சியில் அகஸ்தீஸ்வரம் வட்டார தலைவர் சாம்சுரேஷ்குமார், மாவட்ட பொது செயலாளர் தாமஸ், கன்னியாகுமரி நகர தலைவர் சந்தியாகு ராயப்பன், துணை தலைவர் கிருஷ்ணன் பிள்ளை, மற்றும் நிர்வாகிகள் அகில இந்திய காங்கிரஸ் பொது குழு உறுப்பினர் ஆரோக்கியராஜன், பாண்டியன், மாவட்ட பொது செயலாளர் சாமுவேல் சேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக கன்னியாகுமரி காந்தி மண்டப அஸ்தி கட்டிடம், காந்தி மண்டப வளாகத்தில் உள்ள பாரதமாதாசிலை மற்றும் காமராஜர் சிலை, பழைய பஸ் ஸ்டாண்ட் ஜங்ஷனில் உள்ள ராஜீவ்காந்தி முழு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



பாலக்கோடு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில்

# லஞ்ச ஒழிப்பு போலீஸ் அதிரடி சோதனை கணக்கில் வராத பணம், ஆவணங்கள் பறிமுதல்

தருமபுரி ஜூன் 20

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். சோதனையில் கணக்கில் வராத பணம் மற்றும் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்கள், இடைத்தரகர்களிடம் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ராஜேஸ் கண்ணா கையூட்டு பெறுவதாக வந்த ரகசிய தகவலின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டது. லஞ்ச ஒழிப்பு டி.எஸ்.பி. நாகராஜ், காவல் ஆய்வாளர் பெருமாள் தலைமையிலான குழுவினர் காலை முதல் அலுவலகத்தில் சோதனையில் ஈடுபட்டனர். தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளரும் உடனிருந்தார். வாகன பதிவு, தகுதிச் சான்று, ஓட்டுநர் உரிமம் வழங்குதல் உள்ளிட்ட பணிகளுக்கு லஞ்சம் கேட்பதாக பொதுமக்கள் அளித்த புகாரின் பேரில் இந்த திடீர் சோதனை நடத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சோதனையின்போது அலுவலகத்தில் உள்ள கோப்புகள், ரசீது புத்தகங்கள், பண பரிவர்தனை பதிவேடுகள் ஆய்வு செய்யப்பட்டன. இதில் கணக்கில் வராத பணம் மற்றும் சில முக்கிய ஆவணங்கள் விசாரணைக்காக பறிமுதல் செய்யப்பட்டு எடுத்து சென்றுள்ளனர்.

லஞ்சம் வாங்கியதற்கான ஆதாரங்கள் கிடைத்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என லஞ்ச ஒழிப்பு போலீசார் தெரிவித்தனர். மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசாரின் அதிரடி சோதனை அப்பகுதியில் பரப்பை ஏற்படுத்தியது.

# ஆற்றூர் மரியா நர்சிங் கல்லூரியில் 72 பேருக்கு பட்டமளிப்பு விழா



திருவட்டாறு, ஜூன்.20

ஆற்றூர் மரியா நர்சிங், பிசியோதெரபி மற்றும் அலைட் ஹெல்த் சயன்சஸ் கல்லூரிளின் பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது.

கல்லூரி தலைவர் டாக்டர் ஜி. ரசல்ராஜ் துணை தலைவர் ஷைனி தெரசா ஆகியோர் தலைமை வகித்து குத்துவிளக்கேற்றினர். ஒருங்கிணைப்பாளர் குமாரி தீபா வரவேற்றார். மரியா கல்விக்குழும இயக்குநர் டாக்டர் ஒய். சுஜர் முன்னிலை வகித்தார். மரியா நர்சிங் கல்லூரி முதல்வர் டாக்டர் அகிலா, பிசியோதெரபி கல்லூரி முதல்வர் டாக்ட்ர் வின்ஸ்டன் ஜெய ராஜ், அலைட் ஹெல்த் சயன்சஸ் கல்லூரி இயக்குநர் டாக்டர் ரோக்ரிக்ஸ் ஆகியோர் ஆண்டறிக்கை சமர்பித்தனர். தமிழ்நாடு செவிலியர் மற்றும் மற்றும் தாதியர் கவுன்சில் பதிவாளர் டாக்ட்ர் ஆர். ஷங்கர் ஷண்முகம் சிறப்புரையாற்றி மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கினார். அவர் பேசியதாவது, "மாணவர்களுக்கு பட்டம் பெறும் நாள் ஒரு பொன்னாள் ஆகும். பெற்றோரை, ஆசிரியரை மதிக்க வேண்டும். படிப்பதை எப்பவுமே நிறுத்தக்கூடாது. நாம் பட்டம் பெற்று விட்டதுடன் எல்லாம் கற்றுகொண்டோம் என நினைக்கக்கூடாது. தொடர்ந்து கற்றுக்கொள்ள வேண்டும். கற்க கற்க புதிய விஷயங்கள் நம் மனதில் பதியும். அவை நமது வாழ்க்கையில் புதிய கதவுகளைத்திறக்கும்.

ஏற்பாடுகளை மரியா மருத்துவ மற்றும் பொறியியல் கல்விக்குழும பேராசிரியர்கள், அலுவலகப்பணியாளர்கள், மாணவர்கள் செய்திருந்தனர்.

# பிரதமரின் பாலபுரஸ்கார் விருது குமரி கலெக்டர் அறிவிப்பு

நாகர்கோவில், ஜூன்.20

மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு, அமைச்சகத்தின் மூலம் ஆண்டு தோறும் வீர தீர செயல்கள், விளையாட்டு, சமூக சேவை, அறிவியல் தொழில்நுட்பம், சுற்றுசூழல் கலை மற்றும் பண்பாடு போன்றவற்றில் சிறந்து விளங்கும் 5 முதல் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளை அங்கீகரிக்கும் வகையில் பிரதான் மந்திரி ராஷ்டிரிய பால் புரஸ்கார் விருது வழங்கப்பட்டு வருகிறது.

2026ம் ஆண்டிற்கான விருது வேண்டி பதிவு செய்ய தகுதியுள்ள விண்ணப்பதாரர்களின் கருத்துருக்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் பரிந்துரைப்படி அனுப்ப வேண்டிய கால அவகாசம் 31.07.2026 வரை வழங்கப்பட்டுள்ளது. எனவே தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மத்திய அரசின் https://awards.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்யுமாறும், பதிவு செய்த விண்ணப்பதாரர்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக இணைப்பு கட்டிடம், 3வது தளத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தையும் தொடர்பு கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் அறிவித்துள்ளார்.

கஸியக்காவிளையில்

# அரசு பஸ்சில் பெண்ணின் தங்க சங்கிலி பறிப்பு பெண் கைது



களியக்காவிளை, ஜூன்.20

நித்திரவிளை அருகே காஞ்சாம்புறம்பெருமலை பகுதியை சார்ந்த தங்கப்பன் மனைவி கமலபாய் (72). இவர் நேற்று நாகர்கோவில் வடசேரி பஸ் ஸ்டாண்டில் இருந்து களியக்காவிளை வந்த அரசு பேருந்தில் பயணம் செய்தார்.

இவரது கழுத்தில் கிடந்த 7 பவுன் தங்க செயினை மார்த்தாண்டம் மேம்பாலத்தில் வைத்து அடையாளம் தெரியாத பெண் திருடியுள்ளார். இது குறித்து களியக்காவிளை போலீசுக்கு தகவல் கிடைத்த உடனே சப் இன்ஸ்பெக்டர் மகேந்த் தலைமையில் போலீசார் திருத்தவபுரத்தில் வைத்து அந்த பஸ்சை நிறுத்தி அனைத்து பயணிகளையும் சோதனை செய்தனர்.

அப்போது தூத்துக்குடி மாவட்டம் மந்திதோப்பு, ராஜகோபாலபுரம், பகுதியை சார்ந்த செல்வராஜ் மனைவி மஞ்சீஸ்வரி என்பவரை விசாரித்த போது அவரிடம் இருந்த 7 சரவன் தங்க செயினை பறிமுதல் செய்தனர். இது குறித்து களியக்காவிளை போலீசார் வழக்கு பதிவு செய்து மஞ்சீஸ்வரியை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

நாகர்கோவிலில் கலெக்டர் தலைமையில்

# விவசாயிகள் குறைதீர் கூட்டம்



நாகர்கோவில், ஜூன்.20

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்ட ஆட்சித்தலைவர் தமு,பிரதாப் தலைமையில் நடைபெற்றது. விவசாயிகளின் முக்கியமான கோரிக்கைகள் விவாதிக்க ப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்தில் குறைக்கப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர்கள் பணியிடங்களை மீண்டும் மாவட்டத்திற்கு பெற்றுத் தந்திட ஆவன செய்யுமாறு விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். இதற்கு பதிலளித்த மாவட்ட ஆட்சியர் அவர்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது எனத் தெரிவித்தார்.

கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திட கேட்ட கோரிக்கைக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் வரும் கன்னிப்பூ பருவத்தில் கூடுதல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்து செயல்பட தேவையான இடம் தேடுதல் நடவடிக்கைகள் வேளாண் துறையினர் மூலம் துவங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்கள். விவசாயிகள் தங்கள் பகுதியில் காலியாக உள்ள அரசு கட்டிட விவரங்களை வேளாண் துறை அதிகாரிகளிடம் தெரிவித்திட கேட்டுக் கொண்டார். மேலும் புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு உபகரணங்கள், எடை கருவிகள், பணியாளர்கள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளரை கேட்டுக்கொண்டார்கள்.

தென்னையில் வாடல் நோய் கட்டுப்படுத்திடவும், பாதிக்கப்பட்ட மரங்களை அகற்றிட உரிய இழப்பீட்டுடன் அனுமதி வழங்கவும் விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். இதற்கு தென்னை வாரியத்தின் மூலம் சிறப்பு கருத்தரங்கம் ஒன்றை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் நடத்திட தோட்டக்கலை துறை துணை இயக்குநரை மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

கன்னியாகுமரியில்

# மத்திய அரசின் மைபாரத் தமிழ்நாடு சார்பில் ஆய்வு கூட்டம்



கன்னியாகுமரி,ஜூன்.20

மத்திய அரசின் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் மைபாரத் தமிழ்நாடு மாநிலத்தின் சார்பாக கன்னியாகுமரியில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. நடப்பு கல்வி ஆண்டிற்கான நிகழ்ச்சி செயல் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. முக்கியமாக 10 மற்றும் 12 ஆம் வகுப்பு இடை நிற்றல் மாணவ மாணவிகளை கண்டறிந்து, அவர்களை பள்ளியில் படிப்பை தொடர்வது மைபாரத் மையங்கள் சார்பாக தொடர் முயற்சி எடுக்கவும் மேலும் 8 மாவட்டங்களில் புதிய மைபாரத் அலுவலகங்கள் தொடங்கி மைபாரத் திட்டங்களை அம்மாவட்ட இளைஞர்கள் இடையே கொண்டு சேர்ப்பது எனவும், வளர்ந்த பாரதத்திற்கான போதைப்பொருள் இல்லா இந்தியா, விக்சித் பாரத் நடைப்பயணம், இளைஞர் மன்ற மேம்பாட்டு இயக்கம், தேசிய சர்வதேச முக்கிய தினங்கள் அனுசரித்தல், அரசு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், ஒன்றிய மற்றும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள், செயலில் உள்ள இளைஞர் மன்றங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல், மாநிலங்களுக்கு இடையேயான இளைஞர் பரிமாற்ற திட்டம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் அமல்படுத்துவது பற்றியும் விவாதிக்கப்பட்டது. மாநில இயக்குநர் செந்தில்குமார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் துணை இயக்குநர்கள் சரவணன், சிவா ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாட்டின் உள்ள 38 மாவட்டங்களின் துணை இயக்குநர்கள், மாவட்ட இளைஞர் அலுவலர்கள், கணக்கு மற்றும் நிகழ்ச்சி மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தை கன்னியாகுமரி மாவட்ட மை பாரத் இளைஞர் அலுவலர் சரண். வி. கோபால் ஒருங்கிணைத்தார்.




தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் 1435 ம் (2025 2026) பசலிக்கான வருவாய்த் தீர்வாயம் ஜமாபந்தி நிறைவு தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் சரவணன் கலந்து கொண்டு பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு, பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட ஆவணங்களை வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கவிதா, மாவட்ட நில அளவை உதவி இயக்குனர் செந்தில்குமார், நல்லம்பள்ளி வட்டாட்சியர் பிரசன்ன மூர்த்தி உள்ளிட்ட தொடர்புடைய அரசு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# வேலூர் மாமன்ற கூட்டத்தில் திமுக மேயர் மற்றும் திமுக துணை மேயர் இடையே கடும் வாக்குவாதம்



வேலூர் ஜூன்20

பெண் மேயரை நீ என ஒருமையில் பேசியதுணைமேயர்மேயர் 10% லஞ்சம் கேட்டதாக மாநகராட்சி கூட்டத்தில் துணை மேயர் குற்றச்சாட்டு.

மாநகராட்சி குட்டிசுவராக போனதற்கு நீ தான் காரணம் என துணை மேயர் பேச்சுநீஎனஒருமையில்பேசவேண்டாம் மரியாதை கொடுத்து பேச வேண்டும் என மேயர் ஆவேசம்

வேலூர் மாநகராட்சியில் இன்று மாமன்ற கூட்டம் நடைபெற்றது இந்த இக்கூட்டத்தில் 72 தீர்மானங்கள் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது இதுகுறித்து விவாதம் தொடங்கியது

இக்கூட்டத்தில் மேயர் சுஜாதா ( திமுக), துணை மேயர் சுனில் குமார்( திமுக) , மற்றும் அனைத்து கட்சிகளை சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்

அப்போது துணை மேயர் சுனில் குமார் என் வார்டிலேயே எந்தவிதமான பணிகளும் நடைபெறவில்லை,

இது குறித்து நான்கு மாதங்களாக கேட்டுக் கொண்டிருக்கிறேன் ஆனால் கையேந்து விடாமல் அலைக்கழித்து வருகின்றீர்கள் கையெழுத்தும் போடாமல் இருப்பதற்கு காரணம் நீ 10% கேட்டு தான் கையெழுத்து விடாமல் இருக்கிறீர்கள் என்று நான் சொல்லவா என பொதுவெறியில் உடைத்த துணை மேயர்.

இந்த மாநகராட்சி சீர்கெட்டு போனதற்கும் குட்டிச்சுவராய் போனதற்கும் நீதான் காரணம் என மேயரை பார்த்து கைநீட்டி ஒருமையில் பேசினார்

இதனால் ஆத்திரமடைந்த மேயர் சுஜாதா நீ என ஒருமையில் பேச வேண்டாம் மரியாதை கொடுத்து பேசுங்க என ஆவேசமாக பேசினார்

இதை கண்ட மாமன்ற உறுப்பினர்கள் உங்கள் சண்டையை அப்பறமாக வைத்துக் கொள்ளுங்கள் முதலில் மாநகராட்சி உள்ள பிரச்சனைகளை பற்றி பேசுவோம் என கூறினர்

மேலும் கூட்டத்தில் வைக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து மாநகராட்சி மேயர் படிக்கத் தொடங்கினார் அப்போது மாமன்ற உறுப்பினர்கள் நிறுத்துங்கள் மாநகராட்சி ஆணையர் மற்றும் அரசு அதிகாரிகள் வரவில்லை என்பதால் அவர்கள்வந்தபிறகுமாமன்றகூட்டத்தை நடத்திக் கொள்ளலாம் என பேசினர்

அங்கு ஏற்பட்டும் பிரச்சனைகளை படம் பிடித்துக் கொண்டிருந்த செய்தியாளர்களை யாரும் படம் பிடிக்க வேண்டாம் வெளியே செல்லுங்கள் என கூறியதால் செய்தியாளர்கள் மேயரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு பின்னர் வாக்குவாதத்திற்கு பின்பு செய்தியாளர்களை சேதி சேகரிக்க அனுமதித்தனர்

ஒரே கட்சியை சேர்ந்த (திமுகவைச் சேர்ந்த ) மேயர் மற்றும் துணை மேயர் ஆகியோருக்கு இடையே கடும் வாக்குவாதம் நடைபெற்றதால் அந்த கூட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது

பின்னர் மாநகராட்சி கூட்டத்தில் மேடையில் தற்போதைய முதலமைச்சர் ஜோசப் விஜய் மற்றும் முன்னாள் முதலமைச்சர் மு க ஸ்டாலின் புகைப்படம் வைக்கப்பட்டு இருந்தது இதைக் கண்ட அதிமுகவினர்

இங்கு முன்னாள் முதலமைச்சர் போட்டோவையும் வைக்க வேண்டும் எனதர்ணாவில் ஈடுபட்டனர். அப்போது மாநகராட்சி ஆணையரிடம் உரிமை பெற்று முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி புகைப்படம் வைக்க ஏற்பாடு செய்யப்படும் என தெரிவித்ததன் பேரில் அனைவரும் கலந்து சென்றனர்

# தமிழக வெற்றி கழகத்தின் கருமத்தம்பட்டி நகரக் கழக அலுவலகம் திறப்பு விழா



கோவை ஜூன்:20

கழகத் தலைவர், தமிழக முதல்வர் C. ஜோசப் விஜய் ஆணைக்கிணங்க, கழகப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சி & நீர்வளத்துறை அமைச்சருமான என்.ஆனந்த் அறிவுறுத்தலின் படி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரும், கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான வி.சம்பத்குமார் வாழ்த்துக்களுடன், தமிழக வெற்றி கழகத்தின் கருமத்தம்பட்டி நகரக் கழக அலுவலகத்தை சூலூர் சட்டமன்ற உறுப்பினர் என்.எம் சுகுமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

மேலும், கருமத்தம்பட்டி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சுப மற்றும் துக்க நிகழ்வுகளுக்கான இலவச சேர்டேபிள் வழங்கும் சேவையும், உறுப்பினர் சேர்க்கை முகாமும் தொடங்கி வைக்கப்பட்டது. பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள குறைகள் மற்றும் கோரிக்கைகளை தெரிவிக்கும் வகையில் குறைதீர்க்கும் பெட்டியும் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவில் கலந்து கொண்ட சிறப்பித்த அனைவருக்கும் நகரச் செயலாளர் ஜில்லா பாலு நன்றி தெரிவித்தார். நிர்வாகிகள் ராஜேந்திரன், அமர்சிங், கனகராஜ், இளவரசன், சிவா, ஜீவானந்தம், சிலம்பரசன், கார்த்திகேயன், குமார், சுந்தர், கில்லி, கணேஷ் பாபு, சதீஷ், சஞ்சீவ், சரவணன், அஜித், முத்து, சபரி, ஜேம்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# புரோக்கர்களிடம் இருந்து கணக்கில் வராத 81,500 ரூபாய் ரொக்கப் பணம் பிடிபட்டது

திருப்பூர், ஜூன் 20

திருப்பூர் தெற்கு ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் அதிரடி சோதனை: கணக்கில் வராத ரூ.81,500 பறிமுதல்!

திருப்பூர் தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் (ஆர்.டி.ஓ.) லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸார் நடத்திய அதிரடி சோதனையில், கணக்கில் வராத 81,500 ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். தமிழகம் முழுவதும் உள்ள பல்வேறு வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் இடைத்தரகர்கள் நடமாட்டம் மற்றும் லஞ்சப் புகார்கள் தொடர்பாகப் பெருமளவில் புகார்கள் எழுந்தன. இதனைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதும் மொத்தம் 45 வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் நேற்று ஒரே நேரத்தில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். இதன் ஒரு பகுதியாக, பல்லடத்தில் இருந்து திருப்பூர் செல்லும் ரோட்டில் வீரபாண்டி பிரிவில் அமைந்துள்ள திருப்பூர் தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நேற்று அதிரடி சோதனை நடத்தப்பட்டது. லஞ்ச ஒழிப்புத்துறை டி.எஸ்.பி. ரவிச்சந்திரன் மற்றும் இன்ஸ்பெக்டர் சசிலேகா ஆகியோர் தலைமையில் வந்த 7 பேர் கொண்ட குழுவினர், நேற்று பிற்பகல் 12:00 மணி அளவில் அலுவலகத்திற்குள் புகுந்து சோதனையைத் தொடங்கினர். அலுவலகத்தின் அனைத்துக் கதவுகளும் மூடப்பட்டு, உள்ளே இருந்த அதிகாரிகள் மற்றும் ஊழியர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டது. இந்த சோதனையின் போது, ஆர்.டி.ஓ. அலுவலக வளாகத்தில் இருந்த புரோக்கர்களிடம் இருந்து கணக்கில் வராத 81,500 ரூபாய் ரொக்கப் பணத்தை லஞ்ச ஒழிப்பு போலீஸார் அதிரடியாகப் பறிமுதல் செய்தனர். இந்த லஞ்சப் பணம் யாருக்காக வாங்கப்பட்டது, இதில் எந்தெந்த அதிகாரிகளுக்குத் தொடர்புள்ளது என்பது குறித்து லஞ்ச ஒழிப்புத் துறையினர் தொடர்ந்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் நடந்த இந்த திடீர் லஞ்ச ஒழிப்புச் சோதனை திருப்பூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தருமபுரி அருகே

# கல்குவாரி அமைக்க பொதுமக்கள் எதிர்ப்பு ஜமாபந்தியில் கோரிக்கை மனு கொடுத்தனர்




தருமபுரி ஜூன் 20

தருமபுரி அருகே நத்தஅள்ளி கிராமத்தில் தனியார் ஒருவருக்கு கல்குவாரி அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கல்குவாரி அமைய உள்ள பகுதியில் 40 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் விவசாயத்தை நம்பி வாழ்கின்றனர். இது தொடர்பாக கருத்து கேட்பு கூட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் எழுத்துப்பூர்வமாக எதிர்ப்பு தெரிவித்தும், அதனை பரிசீலிக்காமல் கல்குவாரி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தருமபுரி மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செயலாளர் பாண்டியன் தலைமையில் விவசாய அணி மாநில நிர்வாகி கிள்ளிவளவன், மாவட்ட செய்தி தொடர்பாளர் கரிகாலன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் கல்குவாரி அமைய உள்ள அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் நல்லம்பள்ளி தாலுக்கா அலுவலகத்தில் நடைபெற்ற ஜமாபந்தியில் கோரிக்கை மனு கொடுத்தனர். அந்த கோரிக்கை மனுவில் பகுதியில் நத்தஅள்ளி கிராமத்தில் கல்குவாரி அமையும் பட்சத்தில் வெடிவைப்பதால் தூசி, சத்தம் அதிர்வுகள் ஏற்பட்டு சுற்றுச்சூழல் பாதிக்கும். நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விவசாயம் பாதிக்கப்படும் எனவே அந்த கல்குவாரி அனுமதியே உடனடியாக ரத்து செய்ய வேண்டும். மக்களின் எதிர்ப்பு மனுக்களை மீளாய்வு செய்ய வேண்டும். சுற்றுச்சூழல் நிலத்தடி நீர் பாதிப்பு குறித்து நிபுணர் குழு ஆய்வு செய்ய வேண்டும். இந்த அனுமதி வழங்கியதில் முறைகேடு இருந்தால் விசாரணை நடத்தை வேண்டும். விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மனதில் கூறப்பட்டுள்ளது.

தென்தாமரைகுளம் எல்.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளியில்

# முன்னாள் மாணவர்கள் சார்பில் வாட்டர் பில்டர் அமைப்பு



தென்தாமரைகுளம்.ஜூன்.20

தென்தாமரைகுளம் எல் எம் எஸ் மேல்நிலைப்பள்ளியில் மாணவ மாணவிகள் பயன்பெறும் வகையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டது அதன்படி பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்கள் இணைந்து பள்ளிக்கு 100 லிட்டர் கொள்ளளவு உள்ள சுத்திகரிப்பு உபகரணங்களை பள்ளிக்கு வழங்கினர். அதன் திறப்பு விழா நிகழ்ச்சி பள்ளியில் நடைபெற்றது. அப்போது நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பள்ளி தாளாளர் கால்வின் தலைமை வகித்தார் சேகர ஆயர் ஜார்ஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஜெபித்து உபகரணங்களை பள்ளிக்கு அர்ப்பணித்தார்.

நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியை அனு ஜெ பிரீதா மற்றும் திருப்பணியாளர் தேவராஜ ஆல்வின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் முன்னாள் தாளாளர் அருள் ஞான பெல், ஆலய கணக்கர் பெனிஜோசப், டீக்னஸ் அனிதா, முன்னாள் மாணவர்கள் சந்திரசேகர், செல்லத்துரை, கிளாட்சன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.